# பெரிய ஹதீது மாணிக்க மாலை

குத்புல் கபீர் அஷ்ஷெய்கு ஷாம் ஸிஹாபுத்தீன்
வொலியுல்லாஹ் ரழியல்லாஹு தஆலாஅன்ஹு
அவர்கள் அருளியது

<u>வெண்பா</u>

வானும் புவி ஏழும் வரிசை அர்சும் குர்சும்
தானமுடனே படைத்த தக்கோனே - ஈனமில்லா
மவ்லா நபியுடைய வண்மை ஹதீதின் மாலை
கவ்லால் உரைத்திடவே காப்பு

1. ஏற்றமுள ஆதி நாமங் கொண்டும்
இலங்கும் நபி ஸலவாத்துக் கொண்டும்
பார்த்து தெளிந்துயான் இர்ஷாதிலும்
பார மிகவுள்ள இஹ்யாவிலும்

2. சீர்த்தியணுகிய ஜவாஜிரிலும்
சிறப்பான துர்றுல் மன்தூரிலும்
கோத்து தெரிந்துயான் ஹதீதுமாலை
கூறியுரைத்திட குதாய் துணையே

3. அத்தீக்கு உமர் உதுமான் அலியார்
அண்ணல் ஹஸன் ஹுஸைன் அஸ்ஹாபிமார்
வெற்றி யுடையோர்கள் பரக்கத்தினால்
விண்ணேழ் அமைத்தோனே உதவி செய்வாய்

4. மீரான் முஹ்யித்தீன் பரக்கத்தாலும்
பிஸ்தாமி ஷெய்கு ஹுர்மத்தாலும்
சீராம் ஜுனைது தம் பரக்கத்தாலும்
ஷிப்லி எனும் ஷெய்கு பொருட்டினாலும்

5. நேரான ஸஹ்லு பரக்கத்தாலும்
நீதிபிஷ்ருதம் ஹக்கினாலும்
பேராம் ஒலிமார்கள் பரக்கத்தாலும்
பேணி உரைத்திடத் துணைச் செய்வாயே

6. தேசமடங்கலும் துலங்கவந்த
ஷெய்கு சுலைமான் பரக்கத்தாலும்
தாஜு முடியான மக்களுட
சங்கை பரக்கத்தால் உதவி செய்வாய்

7. வையம்தனிலுள்ள நல்லோர்கள தம்
வண்மை ஹுர்மத்தால் ஹதீதின் மாலை
பொய்யொன்றணுகாமல் உரைத்திடவே
புவியேழமைத்தோனே துணைச்செய்வாயே

8. கனவுதனில் கண்டேன் ஒருவர்வந்து
கவ்லா யுரைத்திட்டார் என்னுடனே
கனதியுள இந்த கிதாபுதன்னைக்
கவியாய்த் தமிழுரை செய்வாயென்றே

9. மண்ணாலுறை தன்னில் பொன்னால் வாளை
வாகாய்ச் செலுத்தின பரிசுபோல

திண்ணமணுகாத புன்சொல்லினால்
சிறப்பாம் ஹதீதுரை செப்புவேனே

10. ஆதி வஹ்யினால் நபிமொழிந்த
ஆழகாம் ஹதீதான மாணிக்கத்தை
நீதமுடன் கேட்டு அமல் செய்வோர்க்கு
நீதிநபி மன்றாட்டுண்டாகுமே

11. ஹதீதால் நாற்பது பாடமிட்டு
குணமாய் அதின்படி நடக்கலுற்றால்
அதிகமுள உலமாக் கூட்டத்தில்
ஆவாரெனச் சொன்னார் ஆலநபி

12. அவர்கள் தனக்கு யான் மன்றாட்டங்கள்
ஆகிறம் தனில் செய்வேனென்று
மவ்லா நபியுரைத்தாரெனவே
வரிசை அபூதர்தா உரைத்தார்

13. பீஸபீல்காரர் கூட்டந்தனில்
பேணிப்பிடித்தோர்கள் ஆவாரென
வாச நபியுரைத்தாரெனவே
வரிசை இப்னு உமர் உரைக்கலுற்றார்

14. எந்த வாசலாலும் சுவர்க்கம்
இனிதாய்ப் புகுதுங்கோ என்றுரைக்க
அந்தமுடன் சொல்லப்படுமெனவே
அழகாம் இப்னுமஸ்வூத் உரைத்தார்

15. நாற்பது ஹதீதறிந்தவர்க்கு
நலமாக இந்த வரிசையுண்டாம்
கூர்ப்பாய் ஆயிரம் ஹதீது செப்ப
குவலயம் தனிலுள்ளோர் கேளீர்

16. எல்லா அமல்களும் கருத்துக்கொண்டு
இருக்கும் அவரவர் தங்களுக்கு
அல்லாஹ் கொடுப்பானே வணங்குங்கள் என்று
அருளினார் எங்கள் ஆலநபி

17. உங்கள் வேசத்தை வெளி அமலை
உடைய பெரியவன் நோக்கான் உங்கள்
சங்கையுள கல்பை பார்ப்பானென
தம்பிரான்நபி சாற்றினரே

18. வணக்கந்தனைக் கொண்டு துன்யாதன்னை
வருடி விருப்பமாய்த் தேடினோர்கள்
மணக்கும் சுவர்க்கத்தின் வாடை ஏற்க
மாட்டார் எனச் சொன்னார் வண்மைநபி

19. தன்கோபம் தன்னைத் தட்டிக் கொண்டால்
தம்பிரான் கோபம் தட்டுண்ணுமென்று
அங்கம் அழகான நபி சொன்னாரென்று
ஆன தப்ரானி அருளிச் செய்தார்

20. தேனின் மதுரம் கத்தாளையினால்

திரியும் பரிசுபோல் ஈமானெறி
தீனைக் கெடுக்கின்ற கோபத்தினால்
தீருமெனச் சொன்னார் சீமான் நபி

21. ஹஸதையுடையோர்கள் கோளுடையோர்
கத்தன்முனிவான குறியுடையோர்
அசையா சுவர்க்கத்திலாகாரென
அருளினார் எங்கள் ஆலநபி

22. நபிதம் நடக்கையை அகன்றுவிட்டு
நாட்டம் தனக் கொற்றபடி நடப்போர்
புவியிலுள காபிர் தங்களிலும்
பொல்லார் மிகக்கெட்ட காபிரென்றார்

23. அமர்த்தி தனைக் கொண்டு ஏற்றுவார்கள்
அல்லில் வணக்கமும் பகல் நோன்புமாய்
திருத்த மறவிருப் போர் தரஜா
தீராம் முனிவன்றி அமைந்தோர்களே

24. மறுமை தனிலும் இம்மை தனிலும்
மன்னர் பொறுமை யுள்ளோர்கள் என்றும்
பொறுமை யுடையோர்கள் நபிதரஜா
பொதிவார் எனச் சொன்னார் பெருமான் நபி

25. புவியில் உள்ள பேர்க்கு இரங்காதார்க்கு
புர்கான் இறக்கினோன் இரங்கான் என
நபிமார் அடங்கட்கும் அரசாய் வந்த

நல்ல முஹம்மது நபி ஓதினார்

26. குற்றம் பொறுக்காத பேர்களுக்கு
கோமான் பொறுக்கான் என்று உரைத்தார் எங்கள்
சத்தம் அழகான நபியிரசூல்
சங்கையுள யார்கள் தங்களுடன்

27. சிறியார்க்கு இரங்காத பெரியோர்கள் தாம்
சிறப்பாம் வரிசை வையாச் சிசுக்கள்
குறிகேடணுகியே செய்வோர் நம்மில்
கூண்டமனு உம்மத் தல்ல வென்றார்

28. சீதேவி யானோர் அவர்கள் கல்பில்
சிறப்பாம் கிருபை யுண்டாயிருக்கும்
மூதேவி யானோர் இரக்கமில்லா
மோசம் அணுகிய பேர்கள் என்றார்

29. ஒருத்தன் ஒருவன் குற்றம் மறைத்தால்
உடையோன் அவன் குற்ற மடங்கலையும்
உருகும் கியாமத்து நாளதிலே
உலகர்தனைவிட்டு மறைப்பான் என்றார்

30. வல்ல வொருவன் பால் ஒரு மு.ஃ.மினை
வரிசை கெடுக்கப்பட்டால் உதவி
நல்லபடி செய்தான் இல்லை யாகில்
நாளை கியாமத்தில் லோகர் காண

31. தொல்லை மிகப்படுவான் எனவே
துலங்கு அர்ஷினில் சென்று வந்த
அல்லல் அணுகாத நபி இரசூல்
அமிர்த மணி வாயால் அருளிச் செய்தார்

32. தன்னை அலங்கரித்து ஒரு மனிதன்
தரைமேல் மதிப்பாக நடக்கையிலே
மன்னன் பெரியவன் முனிவாகவே
வாங்கினான் அவன் தனைச் சுரிய

33. இன்னம் அவன் புவிதனிற் சுரிய
ஏறி யிறங்கிப் போறான் எனவே
கன்னல் மொழி செப்பும் நபி இரசூல்
கனத்த களரியில் கவல லுற்றார்

34. கடுகுமணி நிறை பெருமையுள்ளார்
கனகபதி சொர்க்கம் புகுதாரென
முடுகும் மனிதரை ஆதரிக்கும்
முஹம்மது நபி மொழியலுற்றார்

35. வம்பாம் மனிதரை கியாமத்து நாள்
வல்லான்எழுப்புவான் தர்றத்துப்போல்
துன்பமிக வுள்ள வம்பன் தன்னை
சூழும் மஹ்ஷரில் உள்ள பேர்கள்

36. இன்பமுடனேறி மிதிப்பாரென
எங்கள் முஹம்மது நபி இரசூல்

அன்பாயுரைத்தார் என்று இமாம் முஸ்லிம்
அழகாம் கிதாபினில் அருளிச்செய்தார்

37. தன்னை மதிப்பது எழுபதாண்டின்
சங்கையுள அமல்தனைப் போக்குமென்று
உன்னும் மனதினில் உதிப்பறியும்
உடையோன் வஹ்யினால் நபி ஓதினார்

38. பெருமைத்தனம் விட்டும் களவை விட்டும்
பெருத்த பலாயான தைனை விட்டும்
பிரிந்து மவ்த்தானால் ஆகிறத்தில்
பிர்தவ்செனும் சொர்க்கம் கிடைக்குமென்றார்

39. மிஸ்கீன் உடன் கூடியிருங்கோ நீங்கள்
வெறுப்பாய் பெருமை விட்டகலுமென
மிஸ்கு மணம் வீசும் நபி இரசூல்
விருப்பமுள யார்களோடு உரைத்தார்

40. அடியாருடன் அன்னம் புசிப்பவரும்
ஆடு கறப்போரும் கடை செல்வோரும்
கொடிய பெருமை விட்டகன்றாரென
கூறினார் எங்கள் பெருமான் நபி

41. ஏற்றமுள்ள ஆடை தன்னை விட்டால்
இறைவன் தனை நாடி தாட்சியாக
போற்றலுள சொர்க்கத்து துகில் இவர்க்கு
போர்த்தப்படுமென நபி மொழிந்தார்

42. பொல்லாக் குணமுள்ளார் சொர்க்கம் தன்னில்
புகுதார் என எங்கள் நபி இரசூல்
அல்லாஹ் வஹ்யினால் உரைத்தார் என
ஆலிம் திர்மதி அருளிச்செய்தார்

43. தேனின் மதுரத்தை ஸிர்கா வினம்
தீர்க்கும் பரிசுபோல் துர்க்குணங்கள்
ஆன அமல் தன்னை அழிக்குமென
அஸ்கரி இமாம் பேசி வந்தார்

44. நல்ல அழகான குணமுடையோர்
நாளை கியாமத்தில் நபிதமக்கு
அல்லல் அணுகாத அருகரென
அழகாம் உலமாக்கள் அருளிச்செய்தார்

45. முஸ்லிம்தனைக் கொண்டு பொல்லா எண்ணம்
மோசமணுகியே நினைத்த பேர்கள்
அசையாப் பெரியோனை ஆகா எண்ணம்
அகத்தில் நினைத்தோரென்று அருளிச் செய்தார்

46. தன்னை மதிப்போர்கள் தன்தீன்கொண்டு
ஷர்றான உம்மத்தாகும் என
மின்னத்துளநபி பகர்ந்தாரென
மேலான ஷெய்குதாம் உரைத்தார்

47. கொடுத்த ஸதகாவை உரைப்பவனும்

கொடுக்கா பகீலனும் சதிசெய்வோனும்
அடுக்கான் சுவர்க்கத்தில் புகுதானென
அஹ்மதி ரசூலுல்லாஹ் உரைத்தார்

48. எழுந்த துர்ப்புத்தி தனைப்பயந்து
இருங்கோ என எங்கள் நபிஇரசூல்
தெளிந்தவுரையாக உரைத்தாரென
ஷெய்கு ஷாஜ் எனும் பேருரைத்தார்

49. தனியே சபர் செய்வோர் தானமிடார்
தனித்து அசனஞ் செய்வோர் பயலை
முனிவாயடிப்போர்கள் தீங்கரென
முஹம்மது நபி மொழியலுற்றார்

50. தீனைக்கெடுத்து துன்யா வருந்தும்
தீதர்மிகத் தீங்கர் ஆவாரென
தேனை வடுவாக்கும் சொல்லுடையோர்
செம்மல் முஹம்மது நபி செப்பினார்

51. முனிவாம் துன்யாவை மிகவெடாமல்
முயன்று ஸபராளி போலாகவே
சனியாம் துன்யாவில் இருங்கோ என
சங்கையுள எங்கள் நபியோதினார்

52. ஆடை பழையதாய்க் கிழிந்ததென
அகற்றி களைய வேண்டாம் ஆயிஷா
மூடும் அண்டையால் தைத்துடென
மொழிந்தார் முஹம்மது நபி இரசூல்

53. ஈமான்தனில் முந்தவந்தவர்க்கு
ஏற்ற மகளான ஆயிஷாவை
சீமான் தனமான பேருடனே
சீராய் உறவாடி இராதே என்றார்

54. ஆதிமுக நாடும் அறிவுகொண்டு
அழியும் துன்யாவை நாடினோர்கள்
ஏதம்வெளியாகும் கியாமத்து நாள்
எட்டார் சுவர்க்கத்தின் வாடை என்றார்

55. மனிதர் முகம் தன்னை தன்னளவில்
வாகாய்த் திருப்ப என்றோதினோரை
முனிவாய் இறைவன் கியாமத்து நாள்
முந்த நரகத்தில் தள்ளுவான் என்றார்

56. தனக்கு வெளியான அறிவு தன்னை
சாற்றும் எனக் கேட்ட பேர்களுக்கு
சினத்து வெளிப்படுத்தாத பேர்க்கு
தீரும் கியாமத்து நாள்தனிலே

57. கனத்த கடிவாளம் நெருப்பினாலே
கத்தன் அவன் வாயில் பூட்டுவான் என்று
அனர்த்தம் அணுகாத நபி சொன்னாரென்று
ஆலிம் இப்னு மஸ்வூத் உரைத்தார்

58. மனிதர்தனில் பொல்லா மனுவாகினோர்
வண்ட உலமாக்களாகும் என
கனமாயுரை பேசும் நபிஇரசூல்
கனதி உள யார்களோடு உரைத்தார்

59. ஏகும் கியாமத்து நாள் தனிலே
ஏற அதாபுள்ளோர் இல்மைக்கொண்டு
வாகாய் அமல் செய்யார் என உரைத்தார்
வள்ளல் முஹம்மது நபி இரசூல்

60. மூன்றுவகையாரை கண்குறைய
மொழிந்தோர் முனாபிக் என்றார் இரசூல்
நீண்ட வயதானோர் அறிவுடையோர்
நெறியாய் பதி ஆளும் சுல்தானுமே

61. அறிவுதனைத் தேடி வழி நடந்தால்
அழகாய் அவனுக்கு சுவர்க்கவழி
குறியாய் குறையாதென்றுரைத்தார் எங்கள்
கோஜா முஹம்மது நபி இரசூல்

62. வரிசை அபூதர்ரோடு உரைத்தார் நபி
பாபால் ஒரு பாப் இல்ம் படிக்கில்
பிரிசமுடன் ஆயிரம் ரக்ஆத்
பேணித்தொழுவதில் ஏற்றமென்றார்

63. காலம் பெறப் பள்ளிவாசல் வந்தால்
கருதி அறிவோதிப் படிப்பித்திடல்

கோலம் பெற கபூல் ஹஜ்ஜுடைய
கூலி கிடைக்கு மென்று இரசூல் சொன்னார்

64. ஏற்றமுள்ள இல்மை படிக்க வென்று
எழுந்து புறப்பட்டோர் பீஸபீலில்
மாற்றமுள காபிர் தங்களுடன்
வாளால் பொருதினோர் போலாம் என்றார்

65. அறிவு தனைத் தேடி காலம் பெற
அழகாய் எழுந்தோர்க்கு சொர்க்க வாசல்
திறமாய்த் திறந்திடுமென உரைத்தார்
சிங்காரமான நபி இரசூல்

66. பெருத்த பெரும்பாவம் தனிற்பெரிய
பிரியாப் பெரும் பாவந்தனிலாமென்றார்
கருத்தாயுரைப்பது நான் சொல்லாத
ஹதீதாம் வகை யொன்றை உரைத்தேன் என்றே

67. வல்லவொரு அமல் நடப்பித்தோர்க்கு
வாகாயதன் கூலியும் பிறகு
கல்லையறச் செய்வோர் கூலிகளும்
கனமாய்க் கிடைக்குமென்றார் இரசூல்

68. ஆலிம் இருப்பது தீன் தமக்கு
அமளிமுசீபத்து குறையுமென்ன
ஆலம் தனிலுள்ளோர்க்கு அரசாய் வந்த
அழகாம் முஹம்மது நபி ஓதினார்

69. வல்லவொரு கபீலாக் கூட்டங்கள்
மவ்த்தாயிறப்பது மிக எளிதாம்
நல்லவொரு ஆலிம் மவ்த்தாய் மண்ணில்
நலமாய் மறைவது வருத்தமென்றார்

70. நான் சொல்லா ஹதீதானவையை
நவின்றேன் எனச் சொன்னோர் இருப்புதலம்
ஊண் சீழ் ஒலித்தோடும் நரகத்திலே
உண்டாக்கினான் என்றார் உண்மை நபி

71. மார்க்கம் தனில் இல்லாக் கருமங்களை
வாகாய் வெளியாக்கும் பேர்கள் மேலே
ஆர்க்கும் இறையான பெரிய நாயன்
அமளி லஃனத்துச் செய்வானென்றார்

72. கூடும் ஜமாஅத்தை விட்டோரொட்டை
குறி கேடணுகியே பிரிந்தோர்கள்தான்
நாடும் இஸ்லாமின் வலையைவிட்டு
நகன்றாரென செப்பி நவின்றார் நபி

73. நபி தன் நடவடி விட்டவனை
நாயன் களாவை பொய்யாக்கினோனை
புவிவானமைத்தவன் முனிவானென
புர்கான் முஹம்மது நபியோதினார்

74. நேராம் வழிப்பாட்டில் வரிசையான
நெறியாம் வழிப்பாடு அஹ்மது தன்
சீராம் வழிப்பாடென்று உரைத்தார் எங்கள்
சீமான் முஹம்மது நபி இரசூல்

75. வழிகேடணுகிய பித்அத்துக்கள்
வையம் தனில் செய்தோர் தங்களுடன்
மொழியும் தவ்பத்துக் கூடாதென
மொழிந்தார் முஹம்மது நபி இரசூல்

76. பித்அத்துக்காரர் அமலை ஆதி
விரும்பி கபூலாக்கானென்று நபி
விதமா உரைத்தாரென் றுரைத்தார் எங்கள்
மேலாம் அஸ்ஹாபி உபை என்பவர்

77. ஆகா உலமாக்கள் அவர்களாலே
அழிவார்கள் எந்தன் உம்மத்தெனச்
சாகானுரைப்படி யுரைத்தார் எங்கள்
சங்கை முஹம்மது நபி இரசூல்

78. கலியாண மென்னும் நிக்காஹ்தன்னில்
கடிந்த பித்அத்துக் காரியங்கள்
பெலமாய் நடக்குது அதைவிலக்கல்
பெரிய பர்ளு என்றார் உலமாக்கள் மேல்

79. அவர்களுடன் கூடி உலமாக்களும்
ஆகா நடக்கையில் ஆனாராயின்
மவ்லா முனிவான பாசிக்குமாய்
வண்டன் இப்லீசின் தொண்டனாமே

80. தப்பு தவில்தாரை இதுபோலொற்ற
சங்கை புரோஜன மில்லாவகை
மெய்ப்பாய் கூலிகொடுத் தழைக்க
விலக்காம் ஹறாமென்றார் உலமாக்களே

81. வீணிலுடமையை யழிப்போர்கள் தான்
வீணன் இப்லீசின் உடப்பாமென்ன
ஊண் நித்திரை இல்லா பெரிய நாயன்
உண்மை நபிக்குத்தா னுரைக்கலுற்றான்

82. தீனின் வழியன்றி ஊண் தீனன்றி
சிறப்பாம் கலையன்றி செலவழிப்பு
ஈனமுள வீணென்றுரைத்தார் எங்கள்
இம்மைதனிலுள்ள உலமாக்களே

83. மஹ்ரம் தனையன்றி மற்றுள்ளபேர்
மாப்பிள்ளை கையை பெண்ணின் கையை
தகுமாய்ப் பிடித்துத்தான் கொடுக்கிறது
சங்கை அணுகாத ஹறாமாகுமே

84. பெண்ணும் ஆணுமாய் ஒரு தலத்தில்
பிரிசமுடன் கூடி நிற்கிறது
ஒண்ணாது ஹராமென உரைத்தார்
உலகந்தனிலுள்ள உலமாக்களே

85. எண்ணத்தொலையாத பித்அத்துகள்
இவடம் தனிலுள்ள கலியாணத்தில்
கண்ணால் தெரிசித்தோமென உரைத்தார்
கலைசேர் அறபினிலுள்ளோர்களே

86. கறாபுநடத்து மாப்போல் நடத்தும்
கலியாணக் கூட்டந்தன்னில் கூடி
சராளம் வருவோர்க்கு ல.்.னத் என
ஷறபாம் உலமாக்கள் செப்பினரே

87. செய்ய ஹறாமான கருமங்களை
சிந்தை மகிழ்ச்சியாய் பார்க்கிறது
ஐயமற ஹறாமென்றாரென
அருளினார் எங்கள் உலமாக்களே

88. பந்தக்கால் நாட்ட ஹறாமென
பகர்ந்தார் உலமாக்கள் ஏதுக்கென்றால்
முந்தவுரைத் திட்ட ஹறாமுக் கெல்லாம்
மூடாயிருந்ததின் படியினாலே

89. உந்தன் மனதுக்கு பிடிபடவே
உவமையுரைக்கிறேன் ஹராம் செய்வோர்க்கு
சிந்தை மகிழ்ச்சியாய் குச்செடுக்க

திறமாய் ஒருகாலை நாட்டு மாப்போல்

90. எந்தவகையான ஹறாமுக் கெல்லாம்
இலக்காய் ஸபபாகும் கருமமெல்லாம்
அந்த மணுகாத ஹறாமெனவே
அருளினார் எங்கள் உலமாக்களே

91. எல்லா மிறைகளா வென்றறிந்து
ஈமான் அகத்தில் வையார் அமல்கள்
அல்லாஹ் கபூலாக்கான் என்றுரைத்தார்
அண்ணல் முஹம்மது நபி இரசூல்

92. நன்மைகளாவினில் அவன் பொருத்தம்
நறையும் பூவும் போலென வறியும்
தின்மைகளாவினில் அவன் முனிவு
தீயும் சூடும் போலாகு மென்றார்

93. ஆண்டான் தனைக்கொண்டே செயல்களெல்லாம்
அடியான் தனக்தொரு செயலில்லை யென்று
ஈண்டு மனத்தினாலுரைத்த பேர்கள்
இஸ்லாம் தனைக்கெடுத் தோர்களாமே

94. கண்ட வகையான கருமங்களை
கற்பனை யென்று கவலுவோர்கள்
வென்றியுள வேதமதனைத் தூதரை
வீணென் றுரைத்திடும் யூதர்களே

95. என்பேர் ஒருத்தன் பாலுரைக்கலுற்றால்
இனிமையுடன் ஸலவாத் எனக்கு
அன்பா யுரையாமலிருந்தால் சொர்க்கம்
அழகாம் பெரும்வழி இழந்தானென்றார்

96. என்பெயர் நினைத்தொருவன் நூறு
ஏற்ற முள ஸலவாத் ஓதினால்
இன்ப சுவர்க்கத்தில் ஷுஹதாவுடன்
ஏறுவானென நபி ஓதினார்

97. எந்தன் உம்மத்திலொரு மனிதன்
எனக்கு ஸலவாத்து ஒருக்கால் சொன்னால்
அந்தமுள நாயன் பத்து நன்மை
அழகாயவனுக்கு கொடுப்பான் என்றார்

98. மனிதர் தனில் மிக ஷர்றாயினோர்
வையம் தனிலுள்ளபேர்கள் தன்னை
அநியாயம் கொண்டு பயப்படுத்தும்
ஆகா மனிதர்களாகு மென்றார்

99. நாணமெனும் ஹயா ஈமானென்றும்
நல்ல முஹம்மது நபி சொன்னாரென்று
ஆணித் தரளம் போல் ஹதீது செப்பும்
ஆலிம்திர்மதீ அருளிச்செய்தார்

100. பொன் வெள்ளிப் பாத்திரந்தனிலே

பொருந்திக் குடித்த பேர் திண்டபேர்கள்
துன்பமுள பெருந்தழல் நெருப்பை
தொண்டைதனில் தீற்றிக் கொள்வாரென்றார்

101. பொன்னால் வெள்ளியால் பல்குத்திகள்
புகுதும் செவிதோண்டி சுருமாக்கோல்கள்
அன்னாள் தொடுத்தின்னாள் ஹராமெனவே
அருளினார் எங்கள் உலமாக்களே

102. படை ஆயுதமன்றியுள ஆலத்தில்
பகரமுள வெள்ளி பொன் பதிக்க
கொடிய ஹராமாகுமென வுரைத்தார்
குர்ஆனின் உரைபேசும் உலமாக்களே

103. பட்டயம் மற்ற ஆயுதத்தில்
பகரமுள்ள ஆடைபூட்டிறது
கெட்ட ஹராமாகுமென உரைத்தார்
கீர்த்திமிகவுள்ள இமாம் ஷாபியீ

104. குர்ஆனைப் படித்தபின் மறந்த பேர்கள்
கூடும் கியாமத்தில் வருவாரவர்
குறைநோய் பிடித்தவர் போலாமென
கொந்தார நபி கூறலுற்றார்

105. றாபிஈ இமாம் மற்றுள்ளபேர்
நல்ல குர்ஆனோதிப் பின் மறக்கல்
கோபமுள பெரும் பாவமென

குஷியாம் கிதாபினி லுரைக்கலுற்றார்

106. குர்ஆனில் விலக்கான கருமங்களை
குறித்து தவிழாமல் இருந்த பேர்கள்
உறாமல் அதற்கீமான் கொள்ளாரென
உண்மை முஹம்மது நபியோதினார்

107. கூலிவாங்கினோர் குர்ஆன் தனக்கு
குவலயம்தனில் நன்மைகளை
கோலம்பெற வாங்கிக் கொண்டாரென்ன
குதாய் பால்வழக்கேறுமென உரைத்தார்

108. வேதம்தனையோதி பிழைக்கும் பேர்கள்
மேலாம் கியாமத்து நாள் வருவார்
காதுக்கிடையான வதனமெல்லாம்
கடிந்த வெலும்பா மென்றிரசூல் சொன்னார்

109. ஆற்றங்கரைதனில் வெளிக்கிருந்தோர்
அவர்கள் தமக்காதி ல.'.னத்துடன்
ஏற்றமுள உம்பர் முனிவுமென
எங்கள் முஹம்மது நபியோதினார்

110. முழுக்கின் ஒருமுடி நனையாவிட்டால்
முடியா நெருப்புச்சென்று அவருடலை
அழிக்குமெனச் சொன்னார் நபியப்போது
அலியார் தனைமுடியரிந்தெறிந்தார்

111. ஆதி பெரியோனுக்கச்சமாக
ஆழகாக்குங்கோ உங்கள் முழுக்கை யென
நீதிநபி யுரைத்தாரெனவே
நிகழ்த்தினார் எங்கள் தப்றானியார்

112. நீரிலிறங்கும் போதந்நேரத்தில்
நீளமுள பருமுறியுடுத்து
சீராயிறங்குங்கோ என உரைத்தார்
திங்கள் முஹம்மது நபியிரசூல்

113. ஹம்மாம் தனில் சென்று பெண் பிறந்தோர்
கருதிகுளிப்பது ஹராமெனவே
துன்மார்க்கமில்லா நபியிறசூல்
தொகுத்தாரெனச் சொன்னார் இமாம் ஷாபியீ

114. மாதவிடையான மாதருடன்
வாகாய்ப் புணர்ந்தோர்கள் குர்ஆன் தனக்கு
நீதமணுகாத காபி ரென்ன
நிகழ்த்தினா ரெங்கள் நபி யிறசூல்

115. தொழுகைதனை விட்டோர் நினைவாகவே
தோசமணுகிய காபி ரென்ன
ஓளிவாம் முஹம்மது உரைத்தா ரென
உண்மை இமாம் தப்றானி சொன்னார்

116. நலமாம் தொழுகையை விட்டோர் நாமம்
நாறும் நரகத்து வாசலின் மேல்

பலமாய் எழுதப்பட்டிருக்கு மென
பெருமான் முஹம்மது நபியோதினார்

117. முதலும் குடும்பமும் இழந்தவர் போல்
முழிப்பார் தொழுகையில்லார் நாளையென்று
அதிபர் முஹம்மது சொன்னா ரென்ன
ஆலிம் பைஹகீ யருளிச் செய்தார்

118. வலிய தொழுகையை விட்ட பேர்கள்
வணக்கம் அடங்கலும் அழியுமென
அலியார் மாமனாருரைத்தா ரென
ஆலிம் இஸ்பஹான் என்போர் சொன்னார்

119. தொழுகைதனை விட்டோர் காபிரென்று
துய்ய நபியுல்லாஹ் சொன்னா ரென
தெளிவாம் இஸ்ஹாக்கும் சொன்னா ரென
ஷெய்கு முஹம்மது நஸ்ர் செப்பினார்

120. வரிசை அலி அபூதர்தா ஜாபிர்
வன்மையுள அய்யூ பென்பவரும்
பிரிசமுள்ள நல்ல தொழுகை விட்டு
பிரிந்தோர் பெருங்காபிராகு மென்றார்

121. ஏற்றமுள்ள இஸ்லாம் தனக்கு
இலங்குமடையாளம் தொழுகை என
சாற்றினார் நபியென வுரைத்தார்
சங்கை இப்னு நஜ்ஜாறு என்போர்

122. நாளை கியாமத்தில் முதற் கேள்வியாய்
நாயன் கணக்காக கேட்கும் கேள்வி
வாழும் தொழுகை என்றுரைத்தாரென
வரிசையுள ஆலிம் நஸயி சொன்னார்

123. பெரியோன் திருவுளமுள தொழுகையை
பேணா ஷைத்தான் தன் வதனம் தன்னை
பிரியாக் கரியாக்குமென உரைத்தார்
பீரு தைலமி உரை பேசினார்

124. எல்லா அமலிலும் உகப்பாதிக்கு
ஏதென்றுஉமர் கேட்ட போதுரைப்பார்
எல்லை வக்த்துடன் தொழுகை யென
இஸ்னாது செய்தார் பைஹகியே

125. தொழுகை தனை நெகிழ்ந்திருக்குமது
தோஷம் தனில் பெரும்பாவ மென
தெளிவாயுரை பேசும் இமாம் முஸ்லிம்
செப்பினார் என்றார் உலமாக்களே

126. தொழுகை நெகிழ்ந்தோரைக் காபிரென
சோரி வெளியாக்க ஆமெனவே
தெளிவாயுரைத் தோரில் சிலர் நாமத்தை
செப்பினார் நல்ல உலமாக்களே

127. உமறு அலி அப்துர் ரஹ்மான் ஜாபிர்

உண்மை அபூதர்தா மஆதும்
திமிராம் அபூஹுரைரா அவரும்
சேர்ந்த இப்னு அப்பாஸவரும்

128. இப்னு மஸ்ஊதும் இவர்களன்றி
ஏற்றமுள யார்கள் மிகுதி யுண்டு
புவியில் இமாமான ஹன்பலியும்
போற்றல் இஸ்ஹாக்கு ராஹவியும்

129. இப்னு முபாறகும் இப்றாஹீமும்
ஏற்றமுள ஹகம் அபூபக்ரும்
நவமாம் அறிவுள்ள அபூதாவூதும்
நல்ல இமாம் ஜுபைரும் அய்யூபும்

130. இவர்கள் தனையன்றி மற்றுமுள்ள
எல்லாஇமாம்களும் உலமாக்களும்
மவ்லா வணக்கத்தை விட்டோர்களை
வண்மை யணுகாத காபிரென்றார்

131. ஸுஜுது ருகூவையும் நிரப்பாமலே
தொழுவோர் இஸ்லாமில் சாகாரென
குஷியாய் ஹுதைபாவும் பிலாலவரும்
கூறினார் கூண்டக் களரிதனில்

132. தன்தன் முடிவோடு பிறமுடியை
சங்கையெனச் சேர்ப்போர் தங்களுக்கும்
அந்தம் தனக்காய்ப் பல் அராவுவோர்க்கும்

ஆதில.ீனத் தென்றார் இரசூல்

133. மேனிதனைக்கீறி பச்சைப் பொட்டு
விருப்பமுடன் போடும் பேர்களுக்கும்
ஜீனத் தலங்காரப் புருவரோமம்
திறமாய்க் கழைவோர்க்கும் ல.ீனத்தென்றார்

134. தொழுகைதனக்கு நிற்போர்கள் முன்பால்
தோஷ நடையாக நடப்பதிலும்
தெளிவான நூறு ஆண்டுநிற்க
சிறப்பாமெனச் சொன்னார் சீமானபி

135. ஏதொன் றளவிலோர் மனிதர்நின்று
இனிதாய்த் தொழுகையில் ஒருவர் வந்து
நீதமணுகாமல் முன் நடந்தால்
நெஞ்சுதனைத் தள்ளிவிடுங்கோ என்றார்

136. அதுக்கும் அசையாமல் நின்றானென்கில்
அவனை ஷெய்த்தானெனறு அறிந்து கொண்டு
கதிக்க கொலை செய்ய ஆமெனவே
கலைசேர் இமாம் புகாரி யுரைத்தார்

137. ஜமாஅத்துடன்கூடித் தொழும் தொழுகை
தனித்து தொழுவதில் இருபத்தேழு
நமாஜில் அதிகமாம் என வுரைத்தார்
நெறியால் மிகுந்த நம் நபியிரசூல்

138. குருடரொருவர் நம் நபிபால்வந்து
கோஜாவே யெனக்காமோ தொழ
கருவாம் பைத்தினில் உன்னளவில்
கனதியுள வாங்கு கேட்குமோ வென்று

139. உரிமை முஹம்மதுநபி கேட்டபோது
உரைத்தார் அழகாக கேட்குமென்றே
குருவாம் நபி யுரைத்தார் உமக்கு
கூடித்தொழ விதியாகு மென்றே

140. ஜமாஅத்துடன் கூடித்தொழான் ஜும்அத்தை
சாற்றினார் இவன் இராப்பகலும்
நமாஜும் நோன்புமாய் இருந்தாலுமாம்
நரகமெனச் சொன்னார் இப்னு அப்பாஸ்

141. இய்யம்தனைக் காதில் ஊற்றுவது
எளிதாம் அதான்பாங்கை கேட்டுக்கூடி
துய்ய ஸலாத் தில்லாதிருப் போரென
சொன்னார் அபூஹுரைராவென்பர்

142. பள்ளிதனக்கயலான பேர்கள்
பள்ளிதனையன்றி தொழுதாரெனில்
மெள்ளத்தவஞ்செய்த தொழுகையெல்லாம்
வீணாயழியு மென்றார் அலியார்

143. சுபஹுதனில் இஷாத் தொழுகைதனில்
துரிஸ்தாய் இமாமுடன் தொழாதவரை

கவலுமுரையினால் முனாபிகென
கவல்வோம் எனச் சொன்னார் இப்னு உமர்

144. மூன்று வகையார்கள் தொழுந்தொழுகை
முடுகும் செவிக்காது தன்னைவிட்டு
தாண்டியுயராது என்றுரைத்தார் எங்கள்
சங்கை முஹம்மது நபி இரசூல்

145. நாயன் தனைவிட்டு ஒழித்தவனும்
நலமாம் புருஷனை வெறுத்தவளும்
தூயமு.்.மீன்கள் பொருத்தமில்லா
துன்மையணுகிய இமாமுமாமே

146. ஸப்புதனைச் சேர்ந்து தொழுவோர்களை
தம்பிரான் சேர்ப்பான் கிருபை கொண்டு
தப்பி அகன் றோரைத் தம்பிரானும்
தப்புவான் என்றார் நபி இரசூல்

147. வரிசை இமாமுக்கு முன் தலையை
வாகா உயர்த்தினோன் தலையைநாயன்
பரிவாய் கியாமத்தில் நாய்த்தலை போல்
படைப்பானெனச் சொன்னார் பயகாம்பரே

148. தலையைப் பணிப்போர்கள் உயர்த்தினோர்கள்
சங்கை இமாமுக்கு முன் அவர்கள்
பலமாய் முன்னெற்றி தன்னை ஷெய்த்தான்
பிடித்தங் கிழுப்பானென்று இரசூல் சொன்னார்

149. தொழுகைதனில் நின்று இடவலங்கள்
தோஷமணுகியே பார்க்குமது
குழுவன் இபுலீஸ் இறாஞ்சலென
கூறினார் எங்கள் கோமானபி

150. தொழுகைதனில் நின்று திரும்பிப் பார்த்தால்
தொழுகைதனை ஆதி கபூலாக்கானென்று
அழகாம் நபி சொன்னாரெனப் பேசினார்
அண்ணல் இமாம் தப்றானியென்போர்

151. பெண் கோலம் கொண்ட ஆண்களையும்
பேதை ஆண் கோலம் கொண்டாளையும்
மண்ணில் தனிஸபர் செய்வோரையும்
வல்லான் ல.்.னத்துச் செய்வானென்றார்

152. வண்மையணுகாத குறிபார்க்குதல்
வல்லபெரியவன் தனக்கிணை யென்று
உண்மை நபி செப்பினாரெனவே
ஓசையிப்னுமஸ்வூது சொன்னார்

153. சாத்திரஞ் சொல்வோரிடத்தில் வந்து
சங்கையாய்க் கேட்டு விசுவதித்தோர்
ஏற்றமுள குர்ஆன் தனக்கு ஈமான்
இனிதாய்க் கொள்ளாத காபிரென்றார்

154. கேட்டுவிசுவாசம் கொள்ளாவிட்டால்
கிருபையுடன் நாலுபத்துநாளில்
வேட்டலுடன் செய்த வணக்கமெல்லாம்
வீணாமெனச் சொன்னார் நபி இரசூல்

155. நாற்பதுநாளாய் அவன் தவத்தை
நாயன் கபூலாக்கானென நவின்றார்
கூர்ப்பாய் அதை விசுவாசம் கொண்டால்
குறிகேடணுகிய காபிரென்றார்

156. குறியை விசுவாசம் கொண்ட பேர்கள்
குறிகேடணுகிய காபிரென்று
அறியும் ஸஹாபாக்கள் உலமாக்களும்
ஆலநபி சொன்னார் எனச் சாற்றினார்

157. மூன்று ஜும்அத்தை உதாசினமாய்
முறித்தோன் அகத்தில் முத்திரை போடுவான்
ஆண்ட பெரியவன் என்றிறசூல்
அருளினாரென ஹாக்கிம் சொன்னார்

158. மூன்று ஜும்அத்தை முடையின்றியே
முடுகான் முனாபிகென்றார் எனவே
துாண்டா விளக்கொளி போலுதித்த
துய்ய இப்னுஹிப்பான் உரைத்தார்

159. மூன்று ஜும்அத்தை முடையின்றியே
முடிக்காதவன் மேலேயொருதீனாறு
கூண்டவிதியிடம் இல்லை அரை
கொடுக்கவிதி யென்றார் நபியிறசூல்

160. பள்ளிவாசலில் தோள் கடந்து
பரிவாய் நடக்கின்ற பேர்கள்தன்னை
கொள்ளி யெரிகின்ற நரகத்துக்கு
குறித்த ஸிறாத் தாக்கப்படுமே யென்றார்

161. வளைந்த களரியின் நடுவிலேறி
வண்மையணுகாமல் இருகின்றோனை
குளிர்ந்தவுரை பேசும்நபி இரசூல்
கோமான் லஃனத்துச் செய்வானென்றார்

162. இருவர்க்கிடையிலே விடையன்றியே
இருக்கத்தகுமல்ல என்றிரசூல்
அருமை மணிவாயால் உரைத்தாரென
ஆலிம் ஆபூதர்று அருளிச்செய்தார்

163. துனியா தனில் பட்டு உடுத்தபேர்கள்
துய்யபதி சொர்க்கம் புகுதாரென
கனிவாய் மலர்ந்துரைத்தாரெனவே
கருணையிப்னு ஜுபைர் உரைக்கலுற்றார்

164. வங்கிசம் தன்னில் வடுச்சொல்வதும்
மவ்த்தான பேர்மேல் ஒப்பாரிகள்
சங்கையணுகாமல் சொல்வதுவும்
தள்ளுண்ணும் குபிர் தானாகுமே

165. ஒப்பாரி சொன்னோர் நரகத்திலே
ஊளையிடுவார்கள் நாய்போலென
செப்பமுள நபியுரைத்தாரென
ஷெய்குதப்றானி யுரைக்கலுற்றார்

166. அழுகை தனைக்கொண்டு செத்தோர்களை
அதாபு செயப்படும் குழியிலென
ஒளிவாம் முஹம்மது வுரைத்தாரென
உண்மையுள இமாம் முஸ்லிம் சொன்னார்

167. பிள்ளைமவ்த்தானோர் ஸப்ரு செய்தால்
பிரியாதிருக்கின்ற நரகம் விட்டு
தள்ளொண்ணாக் கோட்டையாகுமென
சங்கை முஹம்மது நபியுரைத்தார்

168. உகப்பாம் மனிதர்கள் மவ்த்தானாக்கால்
உடையோன் களாவென ஸப்ருசெய்தால்
பகைப்பில்லாப் பதிதனில் மாளிகை
பார பைத்துல் ஹம்து அவர்க்காம் என்றார்

169. சிறிய பிராயத்தில் இறந்த பிள்ளை
சிறப்பாய் தாய்தந்தை கைபிடித்து

குறையா சுவர்க்கத்தில் செல்லுமென
கோஜா முஹம்மது நபியோதினார்

170. இப்னுஉமர் பிள்ளை யிறந்தபோது
இனிதாய் முறுவல் செய்தாரப்போது
கவ்மாம் மனு ஏதுக் கென்றபோது
கள்ளன் இப்லீசை வெல்ல என்றார்

171. முஸ்லிம் தனக்கொரு முள்ளுத்தைத்தால்
முன்னோன் ஒரு தறஜாக் கொடுப்பான்
பிசகாம் பிழைதனில் ஒருபிழையை
பெரியோன் பொறுப்பா னென்றார் இரசூல்

172. துருத்தி இரும்பிலுண்டாம் கறையை
துய்தாகப் போக்கும் பரிசுபோலே
ஜுரத்தால் பிழையெல்லாம் போமெனவே
சுல்தான் முஹம்மது நபியோதினார்

173. செத்த பேர்களின் என்புதன்னை
தீங்காய் முறிப்பது ஹயாத்துடனே
சத்தியுடன் முறிக்கும் போலென
சாற்றினார் எங்கள் நபி இரசூல்

174. நெருப்புத் தழலின் மேலிருக்குமது
நேராய்கைறாகும் கப்றின் மேலே
இருக்குமதிலென்றார் நபி இரசூல்
என்றே இமாம் முஸ்லிம் உரைத்தார்

175. பட்டயம்தனில் நடக்குமது
பரிவாய் கைறாகும் கப்றுதனில்
கெட்டநடையாக நடப்பதென்றார்
கிருபைமிகவுள்ள நபி இரசூல்

176. கட்டி நெருப்பிலே நடக்கிறது
கடிந்தவுகப்பாகும் கப்றுதன்னில்
தட்டி மிதிப்பது ஹராமெனவே
சாற்றினார் ஸலவாத்து நபி

177. கப்ரில் இருப்போனைக் கண்டு நபி
கடிந்து இறங்கெனப் பின்னுரைத்தார்
புவியில் ஒடுங்கினோரை வருத்தம்
பொல்லாங்கணுகியே செய்யாயென்றார்

178. கப்றுதனைக் காண போம் வல்லியை
கருணைமுஹம்மது முனிந்தாரென
இப்னு அப்பாஸு உரைத்தாரென
இப்னுஹஜர் உரைத்தார் கிதாபில்

179. தந்தம்முதலுக்கு ஜகாத் திறாமல்
சங்கையணுகாமல் இருப்போர்கள்தான்
முந்திநரகத்தில் வீழ்வாரென
மொழிந்தார் முஹம்மது நபி இரசூல்

180. ஜகாத்தளியாமல் இருந்த முதல்
சாகும் கியாமத்தில் பாம்பாய் வந்து

ஹக்கன் அருட்படி கடிக்குமென
காவல் முஹம்மது நபியோதினார்

181. நாலுகாரியம் இஸ்லாம் தன்னில்
நாயன் பர்லாக்கினான் அதிலே
கோலம் பெற மூன்று கொடுவந்தாலும்
கூடாதெனச் சொன்னார் கோமானபி

182. வரிசைத்தொழுகையும் ஜகாத் தளிப்புமு
வலிமையுள நோன்பும் மக்கந்தனில்
பிரிசமுடன் ஹஜ்ஜு செய்கிறதும்
பேணியுரைத்திட்ட நாலுமாமே

183. ஜக்காத்தளிப்பது இஸ்லாமுக்கு
ஷறபான பாலமாமெனவே
சக்காமுரை பேசார் சொன்னாரென
தப்றானி ஷெய்கு வுரைக்கலுற்றார்

184. பொன்னாலுள பூணாரம் பூட்டினால்
பூட்டுவானவன் தனக்கிறைவன்
மின்னி எரிந்திடும் தழலையென்று
வீரர் முஹம்மது நபியோதினார்

185. வெள்ளிவளை கண்டார் நபியிறசூல்
பீவி ஆயிஷா கைதனிலே
அள்ளி கொடுப்பாயோ ஜகாத் இதுக்கென்று
அருளினாரப்போ இல்லை என்றார்

186. அப்போதுரைக்க லுற்றாருனக்கும்
அழலாம் நரகுக்கும் இது போதுமென்று
ஒப்பமுள நபி சொன்னாரென
உண்மை ஜவாஜிரில் உரைக்கலுற்றார்

187. சொன்னமெனும் பொன்னால் தெறிப்பு போட்டால்
துலங்கும் நெருப்பினால் தெறிப்பு நாளை
முன்னான் பூட்டுவானென உரைத்தார்
வரிசை முஹம்மது நபியிறசூல்

188. இறுக்கனெனும் பகீலன் அத்னில்
ஏகானெனச் சொன்னார் இரசூல் என
அறிவுமிகவுள்ள இமாம் கதீபு
அவர்தன் கிதாபினில் அருளிச் செய்தார்

189. லேசுபடுத்தினோர் கடனாளியை
நெறியாம் கியாமத்து நாள் தனிலே
வாசமுள அர்ஷின் நிழலில்
வல்லானி ருத்துவானென நவின்றார்

190. ஆயமெனும் சுங்கக்காரர் நாளை
அழகாம் சுவர்க்கத்திலாகா ரென
தூய முஹம்மது சொன்னாரென
தோழர் யூஷகு உரைக்கலுற்றார்

191. முடுமைத்தன மன்றி வாங்கிதின்போர்

முனிவாம் நரகத்தின் தழல் நெருப்பை
குடலிலருந்கினாரென உரைத்தார்
குணத்தால் அழகான நபியிரசூல்

192. ஒருவரிடத்திலும் ஒரு வஸ்துவை
உகப்பாகக் கேளேனென்ற பேர்க்கு
விருப்பமுடன் வார்த்தைப்பாடு சொன்னால்
பிஹ்ஷ்தாம்பதிக்கு யான் பிணையாமென்றார்

193. பீவிமார்களை வெளியில் போக
விரும்பினோர்கள் தான் தாய் தந்தையை
தாவிமனது நோவித்தோர்களை
தையல் தனில் ஆண் கோலங் கொண்டோரையும்

194. நாவால் கொடை பேசும் பேர்களையும்
நாற்றமுள கள்ளுக் குடித்தோரையும்
பாவியிவர் அஞ்சு பேர்களையும்
படைத்தோன் முனிவாக பார்ப்பானென்றார்

195. விலகத் தகுமல்லாப் பண்டங்களை
வெளியாக்குமென கேட்டளவில்
உலகந்தனிலுள்ள வுப்பெனவும்
உதகமெனும் நீரு மென்றார் நபி

196. மூன்று காரியம்தனில் மனிதர்
முண்டாமல் கூட்டாவார்களென
வாண்டமனை யிலுண்டாம் நெருப்பும்

மாஉவெனும் நீரும் உப்புமாமே

197. மூன்றாலொரு வஸ்து முஸ்லிமுக்கு
முயன்று கொடுத்தவர் ஓர் அடிமை
கூண்டவுரிமை விட்டாரெனவே
கொடையால் பெருநபி கூறலுற்றார்

198. மனிதர் இவனுக்கு செய்நன்றியை
வன்மையுடன் அறிந்தால் படைத்தோன்
கனமாய் இவனுக்குச் செய்நன்றியை
கருத்தால் அறிந்தவனாகும் என்றார்

199. ஒருவன் ஒருதனுக்கு உதவி நன்றி
உறுதியுடன் செய்தால் அதைநினைத்து
பிரியமுடன் துஆச் செய்தோர் நன்றி
பேணி அறிந்தான் என்றார் இரசூல்

200. நன்றி மஃரூபு செய்தபேர்க்கு
நாவால் துஆச்செய்தால் கைராம் என்றும்
வென்றியுடன் செய்தால் அவன் நன்றியை
விருப்பமுடன் அறிந்தானே என்றார்

201. ஆதிதனைக்கொண்டு ஆணையிட்டு
அழகாய் ஒருத்தன் பால் ஒருதன் கேட்டால்
நீதமுடன் கொடுக்கா திருந்தவர்க்கு
நீதி லஃனத் என்றார் இரசூல்

202. ஈத்தம் பழநிறை ஹலாலுடமை
எளிய மிஸ்கீனுக்கு ஈந்தாலப்போது
ஏற்றுவான் என மின்கரத்தால்
எங்கள் முஹம்மது நபியோதினார்

203. வல்ல ஒரு அடியான் இரப்பின்
வாசல்தனைத் துறந்தால் இறைவன்
கல்லையணுகிய மிடிவாசலை
கடுகத்திறப்பானென்றார் இவர்க்கே

204. தானமெனும் சதகா தோஷத்தை
தண்ணீர் நெருப்பை நூற்கும் பரிசாய்
தானமுடன் அழித்திடும் எனவே
சங்கை நபி இரசூல் செப்பினார்

205. ஆதிமுனிவான கோபந்தன்னை
அழிக்கும் அது ஆகாச்சாவு தனை
நீதியுடன் தட்டுமென உரைத்தார்
நெயினார் முஹம்மது நபி இரசூல்

206. நன்றியறியானை நாயனாணை
நாயின் இனம்போலே மிருகம்போலே
பன்றிபோல் நாளை எழுவான் என
பகர்ந்தார் முஹம்மது நபி இரசூல்

207. நாளை மஹ்ஷரில் கொடை குடையாம்
நலமா மனிதரில் கொடையளித்தோர்

நிழல்தனில் நிற்பார் கணக்குக்கேளவி
நெறியாகக் கேட்குமளவும் என்றார்

208. மிஸ்கீன் தனக்கொரு கலை கொடுத்தால்
மேனிதனில் கலைகிடக்கு மட்டும்
பிசகில்லா நாயன் காவலிலே
பேணி இருப்பான் என்றார் இரசூல்

209. இல்லான் தனக்கொரு ஆடையீந்தால்
ஏகன் சுவர்க்கத்தில் பச்சைத்துகில்
அல்லாஹ் கொடுப்பான் என்றுரைத்தார் எங்கள்
அண்ணல் முஹம்மது நபி இரசூல்

210. பசித்த முஸ்லிம்கள் தனக்கொருத்தன்
பசியாற்றினானெனில் சொற்கக்கனி
முசிப்பும் சலிப்புமில்லாப் பெரிய
முதலோன் கொடுப்பான் என்றார் இரசூல்

211. ரமழான் தனிலொரு நோன்புவிட்டால்
நோவன்றி மற்ற உதுறன்றியே
ஜமனாங்கல காலம்பிடித் தாலந்த
ஸவ்முக்கெதிராகாது என நவின்றார்

212. கணவன் விடையன்றி நப்ல் நோன்புகள்
கணவி பிடிக்கவும் ஆகாதென்று
மணமாம் முஹம்மது உரைத்தாரென
வள்ளல் இமாம் புகாரி உரைத்தார்

213.	நன்மையுள நோன்பு நரகம் விட்டு
நல்ல அரணென்று உரைத்தாரென
தின்மை யணுகாத உத்மானென்போர்
செப்பினாரென ஷெய்குரைத்தார்

214.	வரிசையுள குர்ஆனும் நோன்பும்
வல்லானிடத்தில் மன்றாடுமென
பிரிசமுள நபியுரைத்தார் என்று
பேசினார் எங்கள் இப்னுஹஜர்

215.	ஆதிதனை நாடி ரமளான் தன்னில்
அஞ்சி அழகாக நோன்பு வைத்தால்
நீதமணுகாத முன் பிழைகள்
நீதன் பொறுப்பானென்று இரசூல் சொன்னார்

216.	ரமளான்தனில் நோன்பு வைத்துப்பின்பு
நெறியாய் அவன் நாக்கை வயிறு அபத்தை
சமதமுடன் பேணினோர்க்கு சொர்க்கம்
சங்கைப்பிணை நானென்றார் இரசூல்

217.	கஸ்தூரி வாடை தனில் மணமாம்
கனதியுள நோன்பு பிடித்தோர்கள் வாய்
விஸ்தீர்ண முள்ளான் பக்கலென
விளம்பினார் எங்கள் நபி இரசூல்

218.	நன்மை மிகவுள்ள நோன்புதன்னை

நலமாய்ப் பிடித்தோரைத் துறப்பித் தோர்கள்
தின்மையடங்கலுந் தீருமென்றும்
தீ விட்டு உரிமையும் கிடைக்குமென்றார்

219. அர்ஷின் நிழலின் கீழ் இருத்தி வைத்து
அழகாம் ஒடுக்குகள் இவர்களுக்கு
குர்ஸியுடையவன் கொடுப்பானென
குறைந்த துன்யாவை நெகிழ்ந்தோர் சொன்னார்

220. ஆதிவிதித்ததோர் நோன்பு தன்னை
அழகாய்ப் பிடித்தவர் இறை பக்கலில்
நீதியுகப்புள்ளோர் ஆவாரென
நிகழ்த்தினார் எங்கள் நபி இரசூல்

221. வரிசைமிகவுள்ள நோன்பு வைத்து
வாகாய் துயில் செய்தோர் நித்திரையை
பிரிசமணுகிய இபாதத்தென
பேசினாரெங்கள் நபி இரசூல்

222. வண்மையுள நோன்பு பிடித்தவர்க்கு
வாகாய்ப்புனல் கொடுத்தோர்கள் என்தன்
உண்மை ஹவ்லுநீர் குடிப்பாரென
உயர்ந்த நபியிரசூல் உரைத்தார்

223. மக்கம் தனக்குப்போய்வர உடமை
வாகாயுடையோர்கள் மக்கம் தன்னில்
ஹக்காக ஹஜ்ஜு செய்யாதபேர்

காபிர் யஹுதிகள் நஸ்ரானியாய்

224. சக்குப் பிசகின்றிச் சாவா ரென்று
தம்பிரான் நபிமொழிந்தாரென
தர்க்கம் பறையாத நால்யார்களும்
சங்கை அஸ்ஹாபிமாரும் சொன்னார்

225. கடலின்றி வேறு வழியில்லை யேல்
ஹஜ்ஜுக்குப் போக விதியல்லவென்று
அடவாகச் சொன்னார் இமாம் ஷாபிஈ
அழகான உம்மு எனும் கிதாபில்

226. மிகுதி பிழைப்பெல்லாம் கடல்தனிலே
மேவியிருக்கின்றோன் மேலில் ஹஜ்ஜு
தகுதியுள வாஜிபாகு மென்று
சாற்றினார் இம்லாதனில் ஷாபிஈ

227. மக்கம் தனில்சென்று ஹஜ்ஜு செய்யா
வண்மை யணுகாத காபிர்கள்மேல்
ஹக்காய்த் திறைபோடுவே னெனவே
கருணை உமருகத்தாப் உரைத்தார்

228. சிறப்பான ஹஜ்ஜு செய்யா தொரு
சீமான் இறந்தான் என்னயல் பாகத்தில்
வெறுப்பாய்த் தொழுவித்தேனில்லை யென்றார்
மேலான ஸ.்.துப்னு ஜுபைர்

229. நன்மையுடன் கூடிஹஜ்ஜு செய்தால்
நாயன் அவன் குற்றம் அடங்கலையும்
தின்மையணுகாத பாலகன் போல்
தீர்ப்பானெனச் சொன்னார் பயகாம்பரே

230. கபூலாம் ஹஜ்ஜுக்குக் கூலியில்லை
கனகபதி சொர்க்கம் ஒழிய என்றும்
மவ்லாநபி சொன்னாரென உரைத்தார்
வள்ளல் அபூஹுரைரா என்பவர்

231. நடந்து போய் ஹஜ்ஜு செய்த பேர்க்கு
நாளை கியாமத்தில் ஆதிநாயன்
கடந்த அடிக்கேழு நூறு லட்சம்
ஹசனாத் அளிப்பானென்றார் இரசூல்

232. சீவனுளவஸ்த்தை குறைபடுத்தி
செத்தால் தவ்பா இல்லாமல் நாளை
தாவுநரகத்தில் பெரிய நாயன்
தண்மைகுறை செய்வானென நவின்றார்

233. மிருகசாதி யின்வதனம் தன்னில்
முனிவாய் அடித்தோர்கள் சூடுவைத்தோர்
அர்ஷு குர்சையும் படைத்த நாயன்
அமளிலஃனத்தில் ஆவார் என்றார்

234. நாட்டான் மகனை விற்போருடனும்
நலமாகவேலை செய்த பேர்க்கு
வேட்டலுடன் கூலி கொடானுடனும்
மேலான் வழக்காளியாவான் என்றார்

235. வட்டியருந்தினோர் தங்களை யான்
வானந்தனிலேறும் நாள்தனிலே
திட்டியால் கண்டே னவர்கள் வயிறு
செருமிக்கிடக்கும் பாம்புந்தேளுமாய்

236. வெட்டிதனிற் கிடப்பார் வீக்கமாய்
வீணன் பிர்அவ்னு கூட்டங்கள் தான்
முட்டிச் செருமிவந்தேறிப் போறார்
மொழிந்தேன் ஜிப்ரிலே இவர் யாரென

237. கெட்ட பலிசை யுள்ளோர்கள் என்று (பலிசை-வட்டி)
கிருபை ஜிப்ரயீல் சொன்னார் என
அட்டதிசை எல்லாம் துலங்க வந்த
அஹ்மத் இரசூலுல்லாஹ் உரைத்தார்

238. பலிசை தின்றோர்கள் கியாமத்துநாள்
பைத்தியக்காரர் போலாகவே
உலகர் அடங்கலும் கண்டிடவே
உளறித் தடுமாறிவீழ்வார் என்றார்

239. இரத்தம் ஒலித்தோடும் நதிதனிலே
நீந்தி வருகிறான் கரையைநாடி
வெற்றிபெற வரும் போதொருவர்
விரட்டி எறிகிறார் கரை ஏறவிடாமல்

240. இந்தப்படியவன் ஹாலைக் கண்டு
இவன் யார் எனக் கேட்டேன் ஜிப்ரீலுடன்
அந்தமுள ஜிப்ரீல் உரைத்தார்
ஆகாப்பலிசை தின்றோர்களென்றே

241. பலிசைதனைத் தின்னுவோர்களையும்
பாங்காய் அருந்துவோர் தங்களையும்
பெலமான சாட்சியிருவரையும்
பெருமான் முஹம்மதுநபி முனிந்தார்

242. வட்டிபலிசையில் ஏழுபத்து
வலிய பெரும்பாவம் உண்டும் அதில்
குட்டிச் சிறுபாவமாகிறது
கூடுவது தாயோடாகுமென்றார்

243. வட்டி தனில் ஒருதிர்ஹம் வாங்கல்
வலியஜினா முப்பதொடு மூன்றிலும்
கெட்டபிழை என்றார் ஆதிபக்கல்
கிருபை மிகவுள்ள நபி இரசூல்

244. அவ்வாசி தனில் விராகன் தனில்
ஆகாப் பலிசை ஆமென்றோர்கள் தான்
செவ்வே நடக்காத காபி ரென்ன
திசையாம் உலமாக்கள் செப்பலுற்றார்

245. பலிசை யருந்தினோர் பன்றிபோலும்
பளீஹத்தணுகிய நாய் போலவும்
அலையாப் பெருநாயன் கியாமத்து நாள்
அவனை எழுப்புவான் என ஓதினார்

246. ஹலாலாம் ஒஜிவனம் தனைத் தேடுதல்
கடிந்த விதியென்று முஸ்லிம்கள்மேல்
குலாவும் பெருமையில்லா நபி
கூறினார் என்றார் இமாம் பைஹகி

247. ஹலாலான அன்னம் தனையருந்தி
கருணை நபி சுன்னத்தில் நடந்து
பலாயாம் அநியாயம் தனைத் தவிர்ந்தால்
வரிசைப்பதி சொர்க்கம் புகுவார் என்றார்

248. பத்து திர்ஹத்தால் ஒரு பிடவை
பாங்காய் ஒருதன் கொண்டானதிலே
வெற்றி ஹராமான ஒரு திர்ஹம்
விழுந்தால் அவன்மேல் கிடக்குமட்டும்

249. சக்தியுள நாயன் அவன் தவத்தை
சமூகந்தனில் கூட்டானென இரசூல்

பத்தி பெறச் சொன்னார் என உரைத்தார்
பயகாம்பர் தோழர் இப்னுஉமர்

250. ஹராமாம் உடமைகள் தின்றெழுந்த
கள்ளத்தசையான மாங்கிஷங்கள்
திறமாய் சொர்க்கத்தில் செல்லாதென
செப்பினார் என்றார் இப்னுஹிப்பான்

251. ஹஜ்ஜுமிகச்செய்தாலும் நோன்புகள்
கருதிப் பிடித்தாலும் ஜகாத்திட்டாலும்
கச்சஹராம் தின்றோர் அமல் அழிந்து
கடுக நரகத்தில் வீழ்வார் என்றார்

252. தவசம் தனைக் கட்டிக் குறைந்த போது
சங்கை முஸ்லிம்கள் தங்களுக்கு
தவனமாய் விலையேற விற்போர்
தண்மையுள பாவியாகும் என்றார்

253. ஹராமாம் உடைமையால் ஹஜ்ஜு செய்தால்
கத்தா கபூலாக்கான் என்றுநபி
திறமாகச் சொன்னாரென ஹதீதில்
சிறப்பாம் உலமாக்கள் செப்பினரே

254. வரிசை உமறுரைத்தார் நபியை
வண்மையுடன் சொல்லக்கேட்டேனென்ன
பிரிசத் தவசத்தைக் கட்டிவைத்து
பின்னே குறைந்தக் கால் விற்போமென

255. கருதிமனம் வைத்து இருப்பவர்க்கு
கருங்குட்ட மெனும் குறைநோதலும்
பிரியா அலைச்சலும் மிடிமையுமாய்
பெரியோன் கொடுப்பானென்றார் இரசூல்

256. ரிஜ்காம் தவசத்தைக் கட்டிவைத்து
ரீதியணுகாமல் குறைய விற்போர்
பிசகில்லா நாயன் முனிவுபெற்று
பிரியாமிடையவர்க்கு உண்டாமென்றார்

257. வள்ளல் உமர்பயலிந்தத் தொழில்
வண்மையணுகாமல் செய்தளவில்
மெள்ளச் சிலகாலம் சென்றபோது
மேனிதனில் குறை நோதலானார்

258. உயர்ந்த விலைவிற்போம் எனக்கருதி
ஊரில் தவசத்தைக் கட்டி வைத்து
பயந்த கொடும்பஞ்சம் தனில் விற்பது
பாரப் பெம்பாவம் ஹராமாகுமே

259. தாய்வேறு பிள்ளை வேறாய்ப் பிரித்த
சங்கையணுகாதார் அவர் பிள்ளையை
வாய் முத்திரையாகும் நாளையிலே
வல்லான் பிரிப்பானென்றார் இரசூல்

260. வண்மையுள முஸ்லிம்கள் மேலே
வாளாயுதம் கொண்டு ஓங்கினோரும்

மண்மேல் சதிசெய்த பேர்களும் என்
மனிதர்தனில் அல்ல என்றார் நபி

261. வடுவாம் அய்பான வஸ்துக்களை
மறைத்து முஸ்லிம்கள் தனக்கு விற்போர்
உடையோன் ல.்.னத்தில் ஆவார் என
உண்மை நபி சொன்னார் ஒழியாமலே

262. தனக்கு உகப்பான கருமங்களை
சங்கை முஸ்லிம்கள் தங்களுக்கும்
கனக்க வுகப்பில்லார் ஈமானெறி
கைகூட்டானென்றார் காவல்நபி

263. பொய்யான ஆணை தன்னையிட்டு
போக செலவழிப்போர் சரக்கை
மெய்யாய் இவர்களை நாயன் நாளை
மிகுந்த முனிவாகப் பார்ப்பான் என்றார்

264. உண்மையுடன் கச்சவடங்கள் செய்வோர்
ஓடும் கியாமத்து நாள் தனிலே
தண்மை யணுகாதான் அர்ஷின்கீழே
சங்கையுடன் இருப்பார்கள் என்றார்

265. நிறையால் அளவினால் முற்காலத்தோர்
நீதமணுகாமல் ஹலாக்காயினர்
குறையாது அளவுங்கோ நிறுங்கோ என

கோமான் முஹம்மது நபியுரைத்தார்

266. அளவு நிறை தனில் கபடு செய்வோர்
ஆனகியாமத்து நாள்தனிலே
பழிசேர் நரகத்தில் தாழ்வாரென
பகர்ந்தார் இப்னுஹஜர் தப்ஸீரிலே

267. தரகர் சேருவார் நரகமென்ன
சங்கையுள முன்னோர் சொன்னார் என்று
குருவாம் அஹ்மது இபுனுஹஜர்
கூறினார் ஜவாஜிர் தன்னிலே

268. பேணித் தராசு மீஜானிறாத
பேர்கள் மவ்த்தாகும் போது நாக்கில்
ஆணி அறைந்தாற்போல் தராசின் நாக்கு
அழகாம் கலிமாவைத் தவிர்த்திடுமே

269. கடனாம் தைன் வாங்கி உழப்பிச்செத்தோர்
கருணையுள நன்மை தனையெடுத்து
திடனாய்க் கடன் கொடுத்தோனுக்கிறை
தீரும் கியாமத்தில் கொடுப்பானென்றார்

270. பெண்ணாய்ப் பிறந்தோர்க்கு மஹர் கொடாமல்
பிரிந்து மவ்த்தானோர் வருவார் நாளை
கண்ணால் தெரிசிக்கப்படான் இடத்தில்
ஹராமாம் ஜினாச் செய்தோனாக வென்றார்

271. தைனாம் கடன் தன்னை உழப்புறதும்
தம்பிரான் தனக்கிணை வைப்பதுவும்
மைனாம் பிசகின்றிச் சரியாமென (மைன்-பொய்)
வள்ளல் முஹம்மது நபியுரைத்தார்

272. கடனுக்குடமை வையாது இறந்தோர்
கடிந்த பெரும்பாவியாக நாளை
உடையானிடத்திலே வருவானென
உண்மை நபி இரசூல் மொழிந்தார்

273. மூன்றுமுறை பீசபீலில் சென்று
முயன்று பட்டாலும் கடனுண்டாகில்
ஆண்டான் சுவர்க்கத்திலாகாரென
ஆணையுரையாக நபியோதினார்

274. உண்டாயிருக்கையில் உழப்புறது
உரத்த அநியாயமாகு மென்ன
வென்றியுள நபியுரைத்தார் என
விளம்பினார் புகாரி முஸ்லிம்

275. தகப்பர் மவ்த்தான சிறியோர்கள் தன்
தகுமாம் உடமையை அருந்துவது
பகைப்பாம் பெரும்பாவம் தனில் ஒன்று என
பகர்ந்தார் எனப் பேசினார் புகாரி

276. எத்திம் உடமையை எத்தி தின்போர்
ஏகும் கியாமத்து நாள் தனிலே

வெற்றியுள சொர்க்கம் புகுதார் என
விண்ணேறி வந்த நபியோதினார்

277. தந்தை மவ்த்தான பிள்ளைகள்தன்
தகுமாம் உடமைளை தின்கிறது
அந்தமுள ஆதி பக்கலிலே
அமளி பெரும்பாவமாகுமென்றார்

278. பேசும் வாசலால் பின் வாசலால்
பெருத்த நெருப்பாக எரிந்திடவே
நாஸாம் மனிதரில் சில மனிதர்
நாளை கியாமத்தில் வருவார் என்றார்

279. அவர்கள் தனைசெப்பு மென்றளவில்
அந்தமுள தந்தை இறந்த பிள்ளை
இவர்கள் உடமையை ஹக்கன்றியே
இனிதாகத் தின்றோர் என நவின்றார்

280. தட்டாம் மி.ஃ.ராஜுக்கு ஏகும்போது
சங்கை யணுகா பேர்களை யான்
ஒட்டை மறுகைபோல் கண்டேனவன்
உரைக்கும் வாயிலும் பின் வாயிலும்

281. கட்டி நெருப்பாக எரிந்திடவே
கனதி ஜிப்ரயீல் தம்முடனே
தட்டி இவன் யாரென்றுரைத்த போது
சங்கை எத்தீம் மாலை தின்றோன் என்றார்

282. பிதாவாம் தகப்பனை இழந்திருக்கும்
பிள்ளை தனை வளர்ப்போனும் யானும்
இதமாம் சுவர்க்கத்தில் இது போலென
இனிய நபி இருவிரல் காட்டினார்

283. எளிமைத்தன முள்ள எத்தீமுகளை
ஏற்றமுடன் கூட்டி அசனஞ்செய்தால்
குளிர்மை சுவர்க்கத்தில் குதாய்தஆலா
குடியாய் இருத்துவானென ஓதினார்

284. தீங்கில்லா முஸ்லிம்கள் வீட்டில்
சிறப்பான இல்லம் எத்தீமுகள் தான்
பாங்காய் வளரும் அவ்வீடு எனவே
பாங்கருடன் சொன்னார் பயகாம்பரே

285. சங்கை யணுகாத வீடாவது
தகப்பன் இறந்த பிள்ளையிருந்தும்
பங்கமிகப் படும் வீடெனவே
பகர்ந்தார் நபி என்றார் இப்னு மாஜா

286. எத்தீம் தனைப் பேணியே வளர்த்து
இறந்த மடந்தையை எனக்குமுதல்
வெற்றிப் பதியிற்கண்டேன் எனவே
விரலால் புனலோட்டிவித்தோர் சொன்னார்

287. எளிய எத்தீம்களுக்கு இரக்கமுமாய்

இனிய அயலின்மேல் பெருமைத்தனம்
அழியும் துனியாவில் காட்டார்களை
அதாபு படுத்தான் என்று ஆணையிட்டார்

288. தந்தை யிறந்தோர்கள் தன் தலையை
தம்பிரானுக்காய்த் தடவினோர்க்கு
அந்தமுள நாயன் ஓர் முடிக்கோர்
அழகான நன்மை கொடுப்பானென்றார்

289. புருஷன் இறந்த பெண்சாதிகட்குப்
பேணியுதவி ஒத்தாசை செய்தோர்
பெருமை சிறப்பில்லா காபிர்கள் மேல்
பீஸபீல் வெட்டும் போலெனவும்

290. இரவுதனில் முழித்து அமல்கள் செய்தும்
இலங்கும் பகலில் நோன்புமாக
பிரியாதிருக்கின்ற பேர்தரஜா
பெறுவார் எனச் சொன்னார் பிறையழைத்தோர்

291. ஆதி தனக்கும் ஆகிறம் தனக்கும்
அழகான ஈமான் கொண்டால் அவன்
நீதமுடன் நன்றி அயல் தனக்கு
நெறியாகச் செய்வான் என ஓதினார்

292. அயலான் மடந்தையோடு அணுகிப் பொல்லா
ஆகாச் செயல்ஹராம் செய்கிறது
அயலாம் அறுபது பெண்ணுமான

வடுவாம் ஜினாவிலும் வலிதாமென்றார்

293. மூன்றுமுறை நபி சத்தியமாய்
மொழிந்தார் அயலை அச்சம் ஆக்கினோர்
ஆண்டபெரியவன் தனக்கு ஈமான்
அஞ்சி அகத்தினால் கொள்ளான் என்றே

294. நாற்பது வீடு அயலெனவே
நல்ல அபூபக்கர் உமறு அலி
கூர்ப்பாயுரைத்தார்களென நவின்றோர்
கோஜா இமாம் தபறானி யென்போர்

295. அச்சப்படுத்தினோர் அயலார்தன்னை
அழகாம் சொர்க்கத்தில் ஆகாரென
கச்சக்குணமில்லா நபி ஆணையால்
கன்னல் மொழியாக கவலலுற்றார்

296. ஜாறாம் அயலை நோவித்தோர் என்னை
தகுமாக நோவித்தோர்கள் என்னை
வீறாக நோவித்தோர் ஆதியை
வெளியாக நோவித்தோர் போலென்றார்

297. பீஸபீலுக் கென்றெழுந்த போது
பெருமான் முஹம்மதுநபி பகர்ந்தார்
வாசமாம் அயல்தனைவெறுத்தோர்
வரவேண்டாமென்றபோது ஒருவர்

298. பேசினார் அப்ப அயல்மதிழின்
பிடித்து துறாபுமண் நான்குறைய
நேசமணுகாமல் எடுத்தேனென்று
நிகழ்த்தினார் அப்ப நபியிரசூல்

299. அயலாயிருப்போர்கள் கியாமத்துநாள்
அவ்வல் வழக்காளியாவார் என
பயலாம் அடியாரை அடியா நபி
பகர்ந்தார் எனச் சொன்னார் தப்றானியே

300. ஜிப்ரீல் பலகாலம் என்னுடனே
செப்புவார் வந்துநும் அயலை
தவனமாய்ப் பேணும் எனவே என்று
சங்கை முஹம்மதுநபி ஓதினார்

301. ஏழுமுழத்திற்கு அப்பால் உயர்த்தி
இல்லம் தனை எடுத்தோனிடமே
நாளை கியாமத்தில் சொல்லப்படும்
நன்மையணுகாத பாஸிக் என்றே

302. உயர்ந்ததொரு குப்பா தன்னைக் கண்டு
உண்மைநபி மிக பொருத்தக்கேடாய்
அயர்ந்து அங்கெடுத்தவன் வந்தபோது
அவன்தன் ஸலாமை கையேற்றாரில்லை

303. வீணாம் அகமெல்லாம் கியாமத்துநாள்
விதனமாய்வந்து வீழுமென
காணாக்குறைந்ததால் பெருங்கூட்டத்தின்
கடிந்த விடாய் தீர்த்த நபியோதினார்

304. களிமண்தனைக்கொண்டும்செங்கல்கொண்டும்
கல்வீடு கட்டினோர் ஆதிபால்
இளிம்பா மனிதரென்று உரைத்தார் என
இனிய தப்ரானி இமாம் உரைத்தார்

305. நின்றால் தலைகள் தட்டாமலென்றும்
நீட்டினால் கால் தட்டாமலென்றும்
வென்றியுள மூஸாநபி பந்தல்போல்
வீடான இல்லம் எடுங்கோ என்றார்

306. ஆகாமனிதர்கள் உடமைதன்னை
அழிப்பார்கள் வீணாய் எடுப்பிலென்ன
வாகாய் புறாக்கேறி வானில் சென்ற
வள்ளல் முஹம்மது நபியோதினோர்

307. தனக்கு போதுமட்டு அதனைவிட்டு
சங்கையில்லா வீடெடுப்போர்களை
கனக்க இதைச்சும என்று நாளை
கவலப்படும் என்றார் முனிவாகவே

308. இல்லந்தனில் செலவழிப் போர்கள்தான்
இந்த அதாபிலே ஆயிருந்தால்
கல்லையணுகிய கலியாணத்தில்
கடன்கொண்டழிப்போர்கள்அதாபுசொல்வாய்

309. சிறிய தகப்பனார் அப்பாஸென்போர்
சிறப்பாய் ஒருகுப்பா எடுத்தபோது

அருமை நபியுல்லாஹ் அதனைக்கண்டு
அப்பாஸே இதை இடியுமென்றார்

310. அழியும் உடமைகள் வீண் எடுப்பில்
ஆகாவுடமை என்றார் எனவே
தெளியும் உரைபேசும் அபூதாவூது
திறமாகச் செப்பினார் கிதாபில்

311. வரிசை நபி நூஹு ஓர் குச்செடுத்து
வாகாயிருக்கையில் மனிதர்வந்து
பெரிய வீடெடுப்போ மெனவே
பேசினாரப்போ நபி செப்புவார்

312. பிரியாதிருப்போமோ துன்யா தன்னில்
பிரியமனிதர்க்குப் போதுமென்று
உரியமனிதற்கு நூஹு நபி
உரைத்தார் எனச்சொன்னார் உலமாக்களே

313. நாலுமுழ நீளம் முழம் அகலம்
நாறிக் குழிதனிற் கிடக்கின்றவன்
மேலாம் பரமாக வீடெடுக்க
விதியோ குழி வீட்டை அழகாக்குவாய்

314. வீடுதனை அலங்காரமாக்கி
வீழும் கப்று அறைதனை பாழாக்க
நாடுமோ இது புத்தியுள்ளான்
நன்மையாய் கப்றதனை வாழுவிப்பாய்

315. கூட்டாளியான விசுவாசியை
குறிகேடணுகியே சதிசெய்வோரை
கூட்டேன் எனச்சொன்னார் என் உம்மத்தில்

கொண்டல் குடையாக வந்த நபி

316. நம்பும் மனிதரைச் சதிசெய்வோர் மேல்
நாளை நான் வழக்காளி என
அன்பியாக்கெல்லாம் அரசாய் வந்த
அழகாம் முஹம்மது நபி ஓதினார்

317. சாகும்போது தன் குடும்பத்திற்கு
தகுமாய் வஸிய்யத்துச் செய்யாத பேர்
ஏகும் கியாமத்து நாள் அவர்க்கு
எரியும் தழல் விதியாகும் என்றார்

318. வருஷம் அறுபதில் செய்த அமல்
வாகாய் வஸிய்யத்துச் செய்யாவிட்டால்
பிரியும் அமல்நாளை எரிநெருப்பு
பிந்தாதே முந்தக் கிட்டுமென்றார்

319. எழுபது ஆண்டாய் துர்ச்செயல்கள்
இம்மைதனில் செய்தால் சாகும்பொழுது
தெளிவாய் நெறியாக வஸிய்யத்திட்டால்
ஜன்னத் எனும்பதி சேர்வான் என்றார்

320. தந்தம் வங்கிசம் தன்னைவிட்டு
தகுமல்லா வங்கிசம் சேருவோர்
அந்தமுள ஆதி நாயனுக்கு
ஆகாக்குபிர் செய்தோர் ஆகுமென்றார்

321. மூவர்தனை நாயன் முனிவானென
மொழிந்தார் நபியுல்லாஹ் அதனைக்கேளீர்
ஆவலுள அன்னை தந்தைவிட்டு
அகன்று வெறுத்தோனும் தனிபிள்ளையை

322. கோவித்து பேஜார் ஆக்கினோனும்
குணமாயுரிமை விட்டானை விட்டு
சேவித்து ஒருவனைச் சேர்ந்தவனும்
தீதர் இவர் முவ்வராகும் என்றார்

323. ஒட்டை நிலந்தன்னை அநியாயமாய்
உகந்து இங்கு எடுத்தோர்க்கு எழுபூமியும்
தட்டாய் அரிகண்டமாய்க் கழுத்தில்
சாத்தப்படும் என்றார் நபி இரசூல்

324. அநியாயமாக ஒருச்சாணிலம்
அவனிதனில் எடுத்தோனை நாளை
முனிவாய்ச் சுரிவாங்கப் படும் எனவே
முன்பின் தெரிகின்ற நபி ஓதினார்

325. நிலத்தை எடுத்தோரை ஹக்கன்றியே
நெறியாய் அதைச் சுமப்பாய் எனவே
பெலத்தால் வலியவன் சொல்வான் என்று
பீரு தபறானி பேசி வந்தார்

326. மிகுதி அநியாயம் ஏதெனவே
மேலாம்நபி தமைகேட்டளவில்
தகுதிதனைக்கொண்டு ஒரு முழத்தின்
தரையை எடுப்பது என்றார் இரசூல்

327. முஸ்லிம் வழிதனில் ஒருசாண் நிலம்
முனிவாய் எடுத்தோர்கள் அதனை நாளை
நசியச்சுமப்பார்கள் என்றார் என
நலமாம் தபறானி நவின்றோதினார்

328. வல்ல ஒரு முஸ்லிம் அஸாவை
வம்பாய் ஒருவன் வந்தெடுக்க ஹக்கு

அல்ல எனச் சொன்னார் நபி எனவே
ஆலிம் இப்னு ஹிப்பானுரைத்தார்

329. வார்த்தை விசுவாசமில்லாதார்க்கு
வன்மையுள ஈமானில்லை என
ஈத்தமரத்துாரை ஹயாத்தாக்கிய
ஏற்றமுஹம்மது நபி ஓதினார்

330. ஊசிதனைக் கொண்டு உச்சி தன்னில்
உரமாய்ப் பதிப்பதிலேசாம் ஒரு
வாசமறு ஹராம் வல்லியுடன்
வழியில் நடப்பதாகும் என்றார்

331. பெண்ணாய்ப் பிறந்தவளுடன் தனிக்க
பேணிப் பயந்து கொண்டிருங்கோ என
கண்ணால் இறைவனைக் கண்ட நபி
கனமாம் குழாந்தனில் கவலலுற்றார்

332. என்னை படைத்ததோர் நாயன் ஆணை
எவரும் எவளுமாய்த் தனித்தீராகில்
ஜின்னின் இப்லீசு இடையில் வந்து
திரிவான் எனச் சொன்னார் நபி இரசூல்

333. விலக்காம் ஹராம் நோக்கல் இப்லீசுட
விருப்பமுள்ள நச்சுவாளு என
பலக்கேழ்தனைக் கடந்து அர்ஷில் சென்ற
பயகாம்பர் ஆலநபி ஓதினார்

334. எல்லாவிழிகளும் கியாமத்து நாள்
ஏங்கியழும் அதில் முவ்வர் விழி
தொல்லை தனக்கஞ்சி அழாதெனவே

சொன்னார் ஹராம் பார்வை பாரார்கண்ணு

335. புல்லர் தனைக்கொல்லும் பீஸபீலில்
பேணி முழிப்பாக இருக்கும் கண்ணும்
வல்லான் தனை அஞ்சி அழுதகண்ணும்
வாகாயிது மூன்றும் கரையாதென்றார்

336. ஆதிதனக்கும் ஆகிறம் தனக்கும்
அழகாய் யகீன் கொண்டோர்பெண்ணுடனே
நீதிமஹ்றமன்றி தரிக்க
நெறியல்ல ஹறாமாகுமென்றார்

337. பலிசைதனில் கெட்டபெரும் பலிசை
பதியிலுள முஸ்லிம்கள் தம்மை
பெலமாய் உதாசீனம் சொல்வதென
பேரால் பெரியவர் நபியோதினார்

338. செம்புநகத்தினால் சில மனிதர்
செப்பமுள நெஞ்சை வதனம்தன்னை
சிம்பிப் பிடுங்கக்கண்டு உரைத்தேன் கூறும்
ஜிப்ரயிலே இவர் யாரெனவே

339. ஆனஜிப்ரயில் உரைத்தார் அப்போது
அவனிதனிலுள முஸ்லிம்களை
சீராய்ப் பறையாமல் உதாசீனங்கள்
செப்பினார் என்று ஜிப்ரயில் சொன்னார்

340. நரகந்தனில் கண்டேன் சில பேர்களை
நாற்றமுள விடக்கானவையை
கருதி அருந்துகிறார் இவர் யாரென
கருணை ஜிப்ரயிலோடு உரைத்தேன்

341. பெரியோன் அருட்படி ஜிப்ரயில் சொன்னார்
பெண்ஆண்இவர்களில் மனிதர் தசை
பரிவாகத் தின்று புறம் பேசின
பாவி மனிதர்கள் இவராம் என்றார்

342. ஜய்னபு நம்பிராட்டியர் தான்
சிறப்பாம் ஸபிய்யாவை யஹுதியென்று
ஜபாய் உரைத்த போது அவரை நபி
அநேக நாளாக வெறுத்திருந்தார்

343. ஜாபிரென்னும் அஸ்ஹாபி சொல்வார்
சங்கை நபியுடன் இருந்தோம் நாங்கள்
தாவி ஒரு நாற்றமுண்டாச்சுது
சாற்றுவார் நபியிந்த நாற்றம்

344. பாவி மனிதரில் புறம் பேசின
பளீஹத்தணுகிய நாற்றமென
சாவில்லா நாயன்தன் வஹ்யால்
சங்கையுள யார்களோடு உரைத்தார்

345. ஆகா ஜினாவிலும் புறம்பேசுதல்
அதிக தோஷமென்று உரைத்தார் என
வாகாயுரை பேசும் நல்ல எங்கள்
வரிசை தபரானி வகுத்தனரே

346. புறம்பேசி யானோர் கப்றறையில்
பெருத்த நெருப்பாக எரிந்திடவும்
தறையாம் குழிதனில் கடிந்த அடி சத்தம்படவும்
யான்கண்டேன் என்றார்

347. ஒருதன் இடத்திலே ஒருதன் தன்னை
உறுதிப்பட புறம் பேசப்பட்டால்

கருதியவனுக்கு உதவி செய்தால்
கத்தா முனிவு தான் இவனுக்குண்டாம்

348. கோளன் சுவர்க்கத்தில் புகுதானென்ன
கோஜா நபியுல்லாஹ் உரைத்தார் என்று
தோழர் முஸ்லிமும் அபூதர்ரியும்
துய்ய கிதாபினில் உரைத்தனரே

349. ஈன மிகவுள்ள கோள் கொடுமை
எரியும் நரகத்தில் ஆக்குமென
தானமுடன் ஒரு முஸ்லிம் கல்பில்
சந்தியாதென்றும் நபி பகர்ந்தார்

350. கோளாம் குண்டுணி தன்னில் மிக
குறிகேடணுகியே நடப்போர்கள் தான்
வாழும் மனிதரில் பொல்லாரென
வள்ளல் முஹம்மது நபி ஒதினார்

351. சாடிதனைக் கொண்டு நடப்போர்களை
தம்பிரான் நாளை நாய் வேசத்தில்
கேடாய் எழுப்புவான் என்றார் என
கிருபையுள ஷெய்கு உரைக்கலுற்றார்

352. உங்கள் தனில் கெட்ட பேர்கள் தன்னை
உறுதியுடன் சொல்வேனோ எனவே
சங்கைநபி கேட்டபோது யார்கள்
சாற்றுமென கேட்டார் அப்பொழுது

353. திங்கள் முஹம்மதுநபி செப்பினார்
தீங்காய் மனிதர்கள் கோளைக்கொண்டு
பங்கமுடன் நடப்போர்கள் என

பாங்கரோடு சொன்னார் பயகாம்பரே

354. மூஸாநபி மழை கேட்டபோது
முதல்வன் மழையில்லை என்றான் அப்ப
கோஜாநபி கேட்டார் ஏதுக்கென
கோளன் இருக்கிறான் என நவின்றார்

355. பேசும் அவன் யாரென்றார் அப்போது
பெரியோனுரைத்தான்யான் சொன்னேனாகில்
தோசமணுகிய கோளன் என
சொல்லப்படும் என்னை என நவின்றார்

356. கோளன் இதைக்கேட்டு சலித்து தவ்பா
கூறி இறைப் பக்கல் மிகக் கெஞ்சினான்
ஆளும் பெரியவன் அப்பொழுது
அமளி மழையாக இறக்கினானே

357. இரண்டு முகம் உள்ளான் துன்யா தன்னில்
நாளை கியாமத்தில் நெருப்பினாலே
உண்டாம் இருமுகம் தன்னைக் கொண்டு
உலகர்க்கெலாம் பார்க்க வருவான் என்றார்

358. இருநாக்கு உடையவன் தனக்கிறைவன்
யவ்முல் கியாமத்து நாளதிலே
எரியால் இருநாக்கை அளிப்பான் என
எங்கள் முஹம்மது நபி ஓதினார்

359. தஹ்லீல்தனைக்கொண்டு நிற்போர்களை
தம்பிரான் முனிவான் எனவே
அஹ்மதிரசூல் சொன்னார் எனவே
அழகாம் இப்னுமஸ்வூது உரைத்தார்

360. தாலகுசெய்ய ஹறாம் எனவே
சங்கை உமர் சொன்னார் அதின்பிறகு
மாலிகஹ்மது ஹஸன் பஸரி
வள்ளல் இப்றாஹீமும் ஸஈதும்

361. காலிக்கெனும் நாயன் தனைப்பயந்த
கருணை தவ்ரியும் மற்றுள்ளாரும்
ஹாலிகெனுமிந்த இருவரையும்
ஹத்தால் கொலைசெய்யத் தகுமாம்என்றார்

362. புணர்ச்சிதனை வெளிப்படப்பேசிய
பூவைமார்களும் புருஷர்மாரும்
கணஞ்சேர் கியாமத்தில் ஆதிபக்கல்
கடிந்த முனிவான சத்துரு என்று

363. குணஞ்சேர் நபியுல்லாஹ் சொன்னார் என
குத்ரியெனும் ஷெய்கு மற்றுமுள்ள
மணஞ்சேர் முஸ்லிமும் வரிசையுள்ள
வண்மைஇமாம்களும் உரைத்தார்களே

364. பூவைமார்கள்தான் புருஷமார்தான்
புணர்ச்சி எனும் ஸிர்ரை வெளியாக்கினால்
பாவமிகவுள்ள ஷெய்த்தான் என்றே
பாரக்களரியில் பகர்ந்தார் நபி

365. ஆணொடு அணைந்தவன் அவனளவில்
அவன் பின்னடுத்தவன் அவனளவில்
காணாப் பெரியவன் முனிவாகவே
கருணை எனும் கண்ணால் பாரான் என்றார்

366. பூவையர் பின்னில் அணைந்தபேர்கள்
புர்கானிறக்கின நாயனுக்கு

பாவமிகச் செய்த காபிரெனெ
பார தப்றானி பகரலுற்றார்

367. சீவனுள்ள வஸ்துபொல் ஸூரத்து
தீங்காய் சமைப்போர்கள் தங்களுடன்
சாவில்லான் சொல்வான் இதற்குசீவன்
சாத்துங்கோ என்று நபி பகர்ந்தார்

368. ரூபம் எனுசிலை ஓவியங்கள்
உண்டாக்கினாருடன் இறைபேசுவான்
கோபமுனிவாக இதற்கு சீவன்
கொடுங்கோ என மிகவிதனஞ்செய்வான்

369. மனிதர்களில் மிக அதாபுடையோர்
வளைந்த கியாமத்து நாளதிலே
ஸனமாம் சிலைரூபம் ஓவியங்கள்
சமைப்பாரெனச் சொன்னார் சங்கை நபி

370. இப்னுமகன் அப்பாஸ் உரைக்கலுற்றார்
இனிய நபியோதக் கேட்டேனென்று
புவியில் சிலை சமைத்தோர்கள் தம்மை
போடப்படும் என்றார் நரகத்திலே

371. சமைக்கும் கோலம் போல் இவரை நாளை
தம்பிரான் கோலமாக்கி வைத்து
அணையாது எரிகின்ற நரகத்திலே
அதாபு மிகப்படுவானே என்றார்

372. எந்தன்படைப்புப்போல்சமைப்போர்கள்போல்
இல்லை அநியாயக்காரர் என்று
அந்தமுள ஆதிசொல்வான் என

அழகாம் நபி இரசூல் உரைத்தார்

373. எரியால் ஒருகழுகு எழுந்து செல்லும்
இம்மைதனில் சிலை சமைப்போர்களை
பிரியாது எடுப்பேனென்று உரைத்தவனை
பெரிய நரகத்தில் கொடு புகுதும்

374. உயர்ந்த கப்ரையும் சிலைகளையும்
உரமாயழித்துப் போடென்று நபி
பயந்தங்கு ரையாக உரைத்தார் என
பயகாம்பர் தம்பி அலியார் சொன்னார்

375. ஓவியமுள்ள இல்லத்திலும்
ஊத்தை ஜுனுபாளி இல்லத்திலும்
தாவிக் குலைக்கும் நாயில்லத்திலும்
தக்க மலக்குகள் புகுதார் என்றார்

376. விடையன்றி ஒரு அசனம் தன்னில்
விருப்பமுடன் செல்லும்போது கள்ளன்
படையால் எடுக்கின்ற கொள்ளையாடும்
பரிசுபோல் பிறப்பிடுவான் என்றார்

377. முஸ்லிம் ஒருகுடல் தன்னில் தின்பான்
மோசமணுகிய காபிரானோர்
பிசகின்றி யேழில் தின்பான் என
பெரியோ னருள்படி நபி ஓதினார்

378. கசந்ததுன்யாவில்நிரம்பத் தின்றோர்
கனமாம் குழாம்கூடும் கியாமத்துநாள்
பசியால் மிகுத்தோர்களென உரைத்தார்
படையால் மிக வெற்றியுள்ள நபி

379. வயிறு நிரம்ப தின்றோனைக் கண்டு
வள்ளல் முஹம்மது நபியுரைத்தார்
கைறாயிருக்கும் இத்தீனை நாளை
கருத்தால் தங்கரித் திருந்தாலென்றார்

380. தீனால் பெரும் படைப்பானோர்கள் தான்
தீரும் கியாமத்து நாளதிலே
ஈனமுள கொசுகின் சிறகிற்கு
ஈடாகமாட்டான் என நவின்றார்

381. வல்லவொரு சோற்றில் மிஸ்கீன்களை
வாகா அழையாமல் சீமான்களை
சொல்லி அழைத்திடப்படும் சோறுகள்
தோஷமுள சோறென்றார் முஸ்லிம்

382. மிஸ்கீன் தனையழையாச் சோற்றுக்கு
விரும்பி நடந்தோர்கள் நபி தனக்கு
பிசகின்றி மாறு செய்தார் என
பெரிய இமாம் புகாரி உரைத்தார்

383. வருஷமெனும் ஆண்டு முப்பதாக
வயிற்றை நிரப்பாமல் இருந்தேனென
வரிசையுள இமாம் அபூஹனீபா
வளர்ந்த களரியில் வாய் மலர்ந்தார்

384. உத்தாரமன்றி மனதையின்றி
உகந்து ஒருசோற்றில் போனார் சாக்கி

வித்தாரமாக நட்டமென
விளம்பினார் எங்கள் இமாம் ஷாபிஈ

385. குஷியாய் முஹம்மது நபி இரசூல்
கூறுவார் இம்மைதனில் சுகித்தோர்
பசியாய் இருப்பார் ஆகிறத்தில் என
பாங்கரொடு சொன்னார் பரிவாகவே

386. சரீரந்தனை தண்மைப் படுத்தினோர்கள்
தண்ணீர் ஒறுத்து சோறுதனை ஒறுத்து
பெரியோனிடத்திலே மிகுதி சங்கை
பெறுவார் எனச் சொன்னார் ஆல நபி

387. தீனால் க(கு)டியினால் உங்கள் கல்பை
தீங்காய் கொலை செய்ய வேண்டாமென
மானாருடன் நன்றாயிருக்கும் எங்கள்
வள்ளல் முஹம்மது நபி ஓதினார்

388. குஷியாய்ப் பசியாக இருக்கிறது
கூண்ட அமல்க்கெல்லாம் அரசாமென்ன
அசையா மணி கட்டி வாழும் எங்கள்
அண்ணல் முஹம்மது நபி ஓதினார்

389. நாளிலிருமுறை தின்கிறது
நாதன் விலக்கின இஸ்றாபென
ஆளிலழகான நபி இரசூல்

அன்பாய் ஆயிஷாக்கு உரைக்க லுற்றார்

390. சுகியாலுடல் வளர்த்தோர்களெந்தன்
தோஷமுள உம்மத்தோர்களென்று
ஒஹியால் நபியுல்லாஹ் உரைத்தாரென
உண்மையுள இமாம் பஜ்ஜார் சொன்னார்

391. சோறு பலவகை குடிப்பு வகை
தூசு கலை வகை சொல் அழகாய்
வீறா யிருப்போர்களென் உம்மத்தில்
வேண்டா மனு வென்றார் எம் இரசூல்

392. தின்பீர் குடிப்பீர்கள் வலது கையால்
சிறப்பாய் கொடுப்பீர்கள் வாங்குவீர்கள்
வம்பன் இப்லீசு இடக்கையினால்
வாகாயிவை செய்வான் என்றார் நபி

393. வல்ல ஒருவனுக்கு இரு வல்லிமார்
வாகா இருந்தாக்கால் அவன் நிதமாய்
நல்லபடி நடந்தானில்லை யாகில்
நாளை கியாமத்தில் ஒரு தோள் சாய

394. அல்லல் மிகப்படுவான் எனவே
அஹ்மதுநபி சொன்னார் என
அல்லும் பகலுமாய் முழித்துத் தொழும்
ஆலிம் நஸாஈ என்போர் சொன்னார்

395. நெறியாய் நடப்போர்கள் கியாமத்து நாள்
நிலவின் ஒளிவு போல் குர்ஸி தன்னில்
செறிவாயிருப்பார் என்றார் எனவே
ஷெய்கு அபூஹுஃசைன் முஸ்லிம்சொன்னார்

396. உங்கள் தனில் நல்லார் ஆகிறத்தில்
உகப்பாய் திரீயோடு வாழ்வாரென
சங்கைநபி உரைத்தார் எனவே
சாற்றினார் எங்கள் திர்மிதியே

397. முகத்தில் அடிக்க வேண்டாம் எனவும்
மோசஉதாசீனம் சொல்லி என்றும்
அகமன்றியவள் தனைவெறுக்க
ஆகாதெனச் சொன்னார் அஹ்மதென

398. தகுதியுள இமாம் அபூதாவூது
சங்கை இப்னு ஹிப்பானவரும்
மகுனமுடன் பேசி வந்தாரென
வரிசை இப்ன் ஹஜர் வாழ்த்தினரே

399. வல்லிமார் தங்கள் புருஷரோடு
வாகாயிருந்து அல்லல் பட்டாளாகில்
நல்லபதி சொர்க்கம் புகுவாள் என
நபி பேசினார் என ஹாகிம் சொன்னார்

400. அஞ்சையும் பேணித் தொழுதுகொண்டு
அபத்தையும் காத்து புருஷனுக்கு

வஞ்சகமின்றி வாழ்ந்திருந்தால்
வாழும்பதி சொர்க்கம் புகுவாள் கண்டீர்